## திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு - 2015

---

திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 11(4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லைகளையும் பரப்பையும் நிர்மாணிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களின் மூலம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 11 ஆம் பிரிவின் 3 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுக்காக சபையினால் அனுமதிக்கப்பட்ட முன்மொழிவொன்றின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் இரண்டு அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு சமர்ப்பிக்க வேண்டுமெனினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 12,322,575 தொகையான முதலீட்டிற்காக மீளாய்வாண்டின் போது அல்லது முன்னைய ஆண்டுகளின் போது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 705,128 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 370,784 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 334,344 அதாவது 90 சதவீத வீழ்ச்சியினைக் காண்பித்தது. ஏனைய வருமானம் ரூபா 348,244 இனால் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றைத் தயாரித்தல், உள்ளக நிதியம், சேமிப்பு நிதியம், சேமிப்பு அல்லது சிக்கனச் சங்கங்கள் மற்றும் ஏனைய சமனான முன்மொழிவுத் திட்டத்தை உருவாக்கல், ஓய்வூதியம், கடன், வீட்டு வசதிகள் அல்லது சமனான நலன்களை அவர்களுக்கு கையளித்தல், உடல்ரீதியான அல்லது உளரீதியாக இடர்களுக்கு உள்ளாகி உள்ளபடியான தொழில்களில் ஈடுபடுவதற்கு முடியாதிருப்பார்களாயின் ஏதாவது நிதியுதவியை கையளித்தல், துன்பகரமான செலவினங்களுக்காக பணம் அல்லது ஏனைய உதவிகளை கையளித்தல் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் பிரதான நோக்கங்களாகும்.

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் வருமானம் அதன் பிரதான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு போதியளவான மட்டத்தில் காணப்படாதிருந்தமையால் எதிர்காலத்தில் அதன் நோக்கங்களை நிறைவேற்றும் போது அதற்காக ஏற்படும் நிதியினை வழங்குவதில் ஆபத்தொன்று காணப்படுகின்றமையால் மாற்று நிதிவழங்கும் வழிகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 1998 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான 17 வருடங்களின் போது திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான ஓய்வூதியம், மருத்துவ உதவி மற்றும் மரணப் பணிக்கொடையாக ரூபா 22,965,980 கூட்டுத்தொகை வழங்கபப்ட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் ஓய்வூதியமாக ரூபா 1,438,000 தொகையும், மரண உதவித்தொகையாக ரூபா 40,000 தொகையும், மருத்துவ உதவியாக ரூபா 10,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. எனினும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகளுக்காக நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்றை நியமிக்காது இருந்தமையால் நலனாளிகளுக்காக சேமிப்பு நிதியத்தை உருவாக்கல், சிக்கன சங்கங்களை ஏற்படுத்துதல், கடன் வழங்குதல், கடன் வசதிகளை வழங்குதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1986 இன் 03 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகளின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்காக நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்றை நியமிக்க வேண்டியிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டு முதல் நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று நியமித்திருக்கவில்லை. அதன் காரணமாக நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ஓய்வு நலனொன்றைப் பெறுகின்ற கலைஞர் அல்லது தொழில்நுட்பவியலாளர் ஒருவர் மரணமடைகின்ற போது அதில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்காக காத்திருத்தல் பட்டியலிலிருந்து தகுதியான ஓய்வு பெற்ற நலனாளி ஒருவரை தெரிவு செய்தல் நாளதுவரையாக்கப்படாமை.

(ii) நிதியத்தின் அங்கத்தவரொருவர் உயிர்வாழ்கின்றராரா என்பது தொடர்பாக உரிய உறுதிப்படுத்தும் முறைமைபொன்று பின்பற்றப்படாது மாதந்தோறும்

ஓய்வூதியப்படி வங்கியிலிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும் வங்கியிலிடப்படாது காசாகப் பெறும் ஒரு ஓய்வூதிய நலனாளிகளுக்கு ரூபா 36,000 தொகையான 18 மாத ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வராதிருந்ததுடன் உரிய பணம் உரித்தற்ற ஓய்வூதிய ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும், இதற்கான காரணங்களைக் கண்டறிந்து அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் வழங்கப்படுகின்ற நலன்கள் தொடர்பாக திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு தெரிவுபடுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் புதிய நலனாளிகளை நிதியத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 6.2 (அ) இன் பிரகாரம் பொருத்தமான திட்டமொன்றைப் பயன்படுத்தி நிதியை உழைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்த போதிலும், அவ்வாறான எந்தவித நிகழ்ச்சித்திட்டமோ அல்லது செயற்பாடுகளோ நடப்பாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2014 ஆம் ஆண்டின் சனவரி முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை கொடுப்பனவுகளுக்காக தெரிவு செய்யப்பட்ட முறை உரியவாறு குறிப்பிடப்பட்டிராத ஓய்வூதியம் பெறும் 15 திரைப்படக் கலைஞர்களுக்கு ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,000 வீதம் ரூபா 720,000 கூட்டுத்தொகை நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

அதிகாரசபையின் 6.2 (ஈ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகளுக்காக தனியான பதவியணியினரொன்றை நியமிப்பதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காது நம்பிக்கைப் பொறுப்பின் கடமைச் செயற்பாடுகள் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பதவியணியினரால் நிறைவேறியமையால் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்த நிலைமை எழுந்திருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

நம்பிக்கைப் பொறுப்பு பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட சுயாதீன நிறுவனமொன்றாக இருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டை உள்ளடக்கும் வகையில் கூட்டினைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

நிதியத்திற்காக தனியான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(5)(ஈ) பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது நம்பிக்கைப் பொறுப்பின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | ஓய்வூதியக் கொடுப்பனவு | ஓய்வூதிய நலனாளிகள் உயிர் வாழ்கின்றமையை இனங்காணுதல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடொன்றை ஏற்படுத்துதல் மற்றும் காத்திருத்தல் பட்டியலை நாளதுவரையாக்கல் |
| (ஆ) | நிதியத்தை அபிவிருத்தி செய்தல் | ஓய்வூதியம் செலுத்துதல் மற்றும் மருத்துவ உதவி வழங்குவதற்கு போதியளவான பிரகாரம் நிதியத்தை அதிகரித்தல் |